செ.வெ.எண் 24 நாள்:09.10.2017

# பத்திரிக்கைச் செய்தி

## சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு பள்ளி கல்வி உதவித் தொகை

## விண்ணப்பிக்க கால நீட்டிப்பு

தமிழ் நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 1-ம் வகுப்பு முதல் பி.எச்.டி வரை பயிலும் மைய அரசால் அறிவிக்கப்பட்ட சிறுபான்மையினரான கிறித்துவர், இஸ்லாமியர், புத்த மதத்தினர், சீக்கியர், பார்சி மற்றும் ஜெயின் மதத்தைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு 2017-18 ஆம் ஆண்டிற்கு பள்ளிப் படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை (புதுப்பித்தல் மற்றும் புதியது) விண்ணப்பிக்க ஏற்கனவே சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை மூலம் 05.07.2017 ல் விளம்பரம் வெளியிடப்பட்டது. தற்போது பள்ளி படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை விண்ணப்பிக்க 30.9.2017 லிருந்து 31.10.2017 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

1-ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரைக்கான பள்ளி படிப்பு மற்றும் 11ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்புக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான புதியது /புதிப்பித்தலுக்கான விண்ணப்பங்களை மாணவ/மாணவியர் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்திட வேண்டிய கடைசி நாள் 31.10.2017 வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையின மாணவ/மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித் தொகை பெற உரிய காலத்தில் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்
திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.